# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ அதிவிசேஷமானது**

අංක 1869/45 - 2014 ජූලි 04 වැනි සිකුරාදා - 2014.07.04

***1869/45 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

*கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.*

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கண்டி மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், கங்கவட்ட கோரளை சிறுபிரிவில் (கண்டி மாநகர சபைப் பிரதேசத்தின் அஸ்கிரிய வலய 06) அஸ்கிரிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2003.10.12 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. ஆ.வ. மஹ/5504 இல் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகள் மூன்றின் (03) இன் எல்லைகள் :

01. **துண்டு இல. 3 - வெளிகந்தஹேன - விஸ்தீரணம் : 0.0022 ஹெக்டயார்**
வடக்கு : பிபி மஹ 5292 இல் துண்டு இல. 01 மற்றும் 02 ; கிழக்கு : துண்டு இல. 02 ; தெற்கு : துண்டு இல. 02, 04, 05 மற்றும் நிமாலி பெரேரா உரிமை கோரும் வெலிகந்த ஹேன; மேற்கு : பிபி மஹ5292 இன் துண்டு இல. 01.

02. **துண்டு இல. 6 - வெளிகந்தஹேன - விஸ்தீரணம் : 0.0015 ஹெக்டயார்**
வடக்கு : துண்டு இல. 5 ; கிழக்கு : துண்டு இல. 05 மற்றும் நிமாலி பெரேரா உரிமை கோரும் வெலிகந்த ஹேன; தெற்கு : நிமாலி பெரேரா உரிமை கோரும் வெலிகந்த ஹேன; மேற்கு : நிமாலி பெரேரா உரிமை கோரும் வெலிகந்த ஹேன மற்றும் துண்டு இல. 05.

03. **துண்டு இல. 7 - வெளிகந்தஹேன - விஸ்தீரணம் : 0.0004 ஹெக்டயார்**
வடக்கு மற்றும் கிழக்கு : துண்டு இல. 05 ; தெற்கு : துமிந்த பெரேரா உரிமை கோரும் வெலிகந்த ஹேன; மேற்கு : துமிந்த பெரேரா உரிமை கோரும் வெலிகந்த ஹேன மற்றும் துண்டு இல. 05.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : 4/3/9/2012/டபிள்யூஎஸ்/85.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2014.02.06.

07-613